# வள்ளலாரின் அருட்கொடை

*வே. சபாபதி*

## 1. கட்டுரையின் நோக்கம்

**உ**லகமக்களை வாழ்விப்பதற்காக வந்துதித்த வள்ளலார் உருவாக்கித் தந்த கருத்துச் செறிவுள்ள, நிலையான பேரின்ப வீட்டிற்குத் திறவுகோலாயுள்ள அருட்சொற்றொடர்கள் சில உள்ளன. அத்தொடர்களே வள்ளலார் மக்களுக்களித்த அருட்கொடையாக இங்கு விளக்கப்படுகின்றன. அத்தொடர்களில் வள்ளலாரின் திருவுள்ளமும் அருள் சுரந்து, கனிந்திருந்த வாழ்க்கையும், பொருள் பொதிந்த ஆன்மீகக் கருத்துகளும் மலிந்து கிடக்கின்றன. எனவே, அத்தொடர்களைப் புரிந்து கொள்ளுதல் என்பது வள்ளலாரையும் அவர் மேற்கொண்ட அருள் வாழ்க்கையையும், அவர்தம் நெறியையும் கொள்கை களையும் புரிந்து கொள்வதற்கு ஒப்பாகும். ஏனெனில், இன்றைய உலகு வள்ளலாரை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. வள்ளலாரை ஓரளவிற்கேனும் புரிந்து கொள்வதற்கு இத்தொடர்கள் பெரிதும் துணை புரிவன ஆகும். மேலும், அத்தொடர்களில் அடங்கியுள்ள கருத்துகளும் நெறிகளும் இன்றைக்கும் மக்களுக்கு நன்மையைக் கொண்டு வரும் என்பதால் அவை தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## 2. முன்னுரை

### 2.1 வள்ளலார் - ஆன்மீகப் பெருந்தகை

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் ஒருவராகத் தோன்றி சோதியில் கலந்த

* 2000 – ஆவது ஆண்டில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு இரண்டாவது மாநாட்டில் வாசிக்கப்பெற்ற கட்டுரை.

மகான் வள்ளலார். அவர் திருக்கூட்ட மரபிலே ஒருவராகத் தோன்றியிருப்பினும் பிற அடியார்களைவிடப் பல்வேறு தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் கொண்டிலங்கு பவர். ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல் வந்துதித்திட்ட மாமணியாய்த் திகழ்பவர் வள்ளலார். கருணையின் திருவுருவமான அவர் தமிழகத்தின் தவப்பயன். திரு. வி. க. அவர்கள், " இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நாட்டில் இருள் படரலாயிற்று. அவ்விருள் கடிய எழுந்த ஞாயிறு நம் இராமலிங்க சுவாமிகள்"[1] என்று வள்ளலாரின் தோற்றத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீகத் துறையில் தனக்கென்று ஒரு செந்நெறியை உருவாக்கிக் கொண்டு, அதன்வழியில் சென்று, மற்றவர்களுக்கும் தாம் கண்ட மெய்நெறியை விளக்கி உய்யும் வழியைக் காட்டிய செம்மல் வள்ளலார். தன்னை நாடிவந்த அதாவது உலகியலில் மூழ்கி, ஆனால் கரையேறி அருளுலகிற்கு வர விரும்பிய அன்பர்களுக்கு வழிகாட்டும் பெரும் பணியையும் இரக்கத்தின் காரணமாக ஏற்றுக் கொண்டவர் வள்ளலார். எல்லா மக்களும் இன்புற்று வாழ விரும்பிய வள்ளலார், அதற்கான வழிமுறைகளையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

## 2.2 வள்ளலார் வாழ்ந்த காலச்சூழல்

வள்ளலார் வாழ்ந்த காலத்தின் பின்புலத்தையும் சூழலையும் புரிந்து கொண்டால்தான் அவருடைய அருட்பணிகளின் சிறப்பு எத்தகையது என்பதனை நன்கு உணர முடியும். வள்ளலார் வாழ்ந்த காலப்பகுதியில் பாரதநாடு அந்நியர்களின் பிடிக்குள் அகப்பட்டிருந்தது; ஆங்கிலேய ஆட்சி வலுவடைந்திருந்தது. வணிகர்களாக வந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சியாளர்களாக மாறி, கொள்ளை இலாபம் குவித்துக் கொண்டிருந்தனர். பாரத மக்களோ வறுமையில் வாடிக் கொண்டிருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஏழு பஞ்சங்களும் பிற்பகுதியில் இருபத்து நான்கு பஞ்சங்களும் ஏற்பட்டிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[2] தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பது பஞ்சமும் வறுமையும் நிறைந்த நூற்றாண்டு என்கிற அளவிற்குத் துன்பம் நிலவியது. மழை இல்லாது வறட்சி ஏற்பட்ட காரணத்தால் பெருந்தொகையினர் அகால மரணம் அடைந்தனர்.

அரசியல் விழிப்புணர்ச்சி மக்களிடம் ஏற்பட்டிராத காலப்பகுதி அது. எண்ணற்ற சாதிகள் மக்களைக் கூறு போட்டு ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. தீண்டாமை புற்றுநோயாக வளர்ந்திருந்தது. இச்சூழலை, "வள்ளற்பிரான் காலத்தில் தமிழ் நிலத்தில் சமயச் சண்டையும், சாதிப்பிணக்கும் கைகோர்த்துக் குலவின. உயிர்கள்பால்

அருளுடைமை மறைந்து விட்டது; சகோதர நேயம் சாய்ந்து விட்டது; உண்மைச் சமயநெறி மங்கிப் போலிச் சமயச் சடங்குகளும் மூடப் பழக்க வழக்கங்களும் தாண்டவமாடின"[3] என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். சமயத்தில் பல்வேறு பிரிவுகளும் அதனால் விளைந்திட்ட சமயப் பூசல்களும் எண்ணற்ற பொருளற்ற சடங்குகளும் காணப்பட்டன. அறிவைத் தரும் கல்வியும் எல்லாருக்கும் கிடைக்கக்கூடிய நிலையில் இல்லாமல் மேலினத்தவர்க்கே சொந்தமாக இருந்தது. வடமொழி மோகம் தளர்ந்து ஆங்கில மோகம் படிப்படியாகப் படரத் தொடங்கியது. அவர்களுக்கிருந்த பொருளாதார, சமுதாய, சமயச் சிக்கல்கள் ஆகியவற்றிலேயே அவர்களை உழலச்செய்து கொண்டிருந்தன. இவைபற்றிய சிந்தனையே மக்களிடம் இல்லாமல் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. இதன் விளைவாக, இந்து சமயத்தில் சீர்திருத்தச் சிந்தனைகள் மேலோங்கின. இந்தச் சீர்திருத்தத்தின் ஆர்வ வேகத்தில், இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துகளையே மூடநம்பிக்கையென்று புறக்கணித்துப் பிற சமயங்களில் சிலர் ஈடுபட்டனர்.

## 2.3 வள்ளலாரின் பணிகள்

இத்தகையதொரு சூழலின் பின்புலத்தில்தான் வள்ளலார் தோன்றி; தம் பணிகளைத் தொடங்கினார். புரையோடியும் செல்லரித்தும் போயிருந்த சமய, சமுதாய, அரசியல், பொருளாதாரச் சீர்கேடுகளை முழுமையாக அறிந்திருந்த வள்ளலார் அவற்றைப் போக்கி, புத்துலகம் ஒன்றைப் படைக்கும் விழைவு கொண்டார். தம்காலச் சூழல்கள் யாவும் மனிதன் மனிதனாக இருப்பதற்கும், மனிதன் முழுமைப் பெற்றுப் புனிதனாக ஆவதற்கும் தடையாக இருப்பதனை அவர் உணர்ந்தார். கஞ்சி குடிப்பதற்கு இல்லாமலும் அதன் காரணங்கள் அறியாமலும் பரிதவித்து மடிந்த மக்களுக்கிடையில் வாழ்ந்தவர் வள்ளலார். அதனாற்றான், " பசியினால் இளைத்தே வீடுதோறறிந்தும் பசியறாதயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்" என்று பாடி உளம் பதைத்தார். அதனால் அருளே உருவான இறைவனை உணர்ந்த வள்ளலாரால் மக்களின் துன்பத்தைப் புறக்கணிக்கவோ அதிலிருந்து ஒதுங்கியிருக்கவோ முடியவில்லை. எனவே, மக்களின் பசிப்பிணியைப் போக்குதலை முதன்மைப் பணியாகக் கொண்டார். அப்பொழுது உணவுக்காக மக்கள் எதனையும் செய்யத் தயாராக இருந்தனர். இதனைச் சிலர் தங்களின் சுய லாபத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்றனர். இக்காலப் பகுதியில் மத மாற்றங்கள் பரவலாக நிகழ்ந்தன. இதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக வள்ளலார் 'சத்திய தருமசாலை'யைத் தோற்றுவித்தார். இயக்கங்களோ அல்லது அரசோ மேற்கொள்ள வேண்டிய உணவு தரும் மாபெரும் பணியைத் தனியொருவராகப் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே துணிந்து நின்று போராடி சாதித்தார். இந்தியச் சமய வரலாற்றிலேயே மக்களுக்கு இலவசமாக உணவு வழங்க வேண்டும் என்பதற்காக

முதன்முதலாக நிறுவனம் கண்டவர் வள்ளலார்தான் என்று போற்றப்படுகின்றார்.[4]

பின்னர், ஒரு மருத்துவராக (சித்தர்) இருந்தும் மக்களின் நோய்களைக் குணப் படுத்தினார். இப்பணிகளுக்குப் பிறகே பிற முயற்சிகளில் நாட்டம் செலுத்தினார். குறிப்பாக அன்பு, அருள், இரக்கம் ஆகியவற்றைத் தழைக்கச் செய்து உலகில் ஒருமைப்பாட்டைக் கொணர்வதற்கு முயன்றார். அவ்வழியில் உலக உயிர்கள் உய்வடைவதற்கும், ஈடேறுவதற்கும் உரிய வழிகளில் ஈடுபட்டார். அவ்வேளையில் தான் இந்த அருட்தொடர்கள் அவராலே தமிழிலேயே ஏற்படுத்தப்பட்டன.

மக்களை விழிப்புடையவர்களாக்கத் தமிழையே கைக்கொண்டார். தவிர, அவர்காலத்தில் தமிழ்ப்பற்றையும் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாட்டையும் வளர்க்க வேண்டிய நிலையில் தமிழகம் இருந்ததால், தமிழிலேயே அனைத்தையும் மேற்கொண்டு மற்றவர்களுக்கு முன்னோடியாக இருந்தும் புதிய யுகம் தோன்றுவதற்கு வழிவகுத்தும் தந்துள்ளார். தம் பணிகளுக்குத் தமிழையே கருவியாக ஏற்றுத் தெருவெங்கும் பரப்பக் கவிதைநடையில் “திருவருட்பா’வையும் உரைநடையில் ‘மனுமுறை கண்ட வாசக’த்தையும், ‘ஜீவ காருண்ய ஒழுக்கத்’தையும் படைத்தார். இவை வள்ளலாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்குச் சான்றாகும். தம்மைச் சார்ந்தவர்களுக்கு இவர் தமிழ் கற்றுக் கொடுத்தார். அவர்களின் தத்துவ வினாக்களைத் தீர்த்து வைக்கும் ஞானாசிரியராகத் திகழ்ந்தார். முதன்முதலாக முதியோர் கல்விக்குப் பாடசாலை நிறுவியவர் இவரே. முதன்முதலாகத் திருக்குறள் வகுப்பினைப் பொதுமக்களுக்காகத் தொடங்கி நடத்தியவரும் இவரே. முதன்முதலாக மும்மொழிப் பாடசாலை (தமிழ், வடமொழி, ஆங்கிலம்) நிறுவியவரும் இவரே. முதன்முதலாகக் கல்வெட்டுகளை ஆராயத் தொடங்கியவரும் இவரே. தம் காலத்தின் சூழ்நிலையை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் மாற்றம் காணவிழைந்து அதற்காக இவற்றையெல்லாம் மேற்கொண்டார். மனித சமுதாயத்தைச் செம்மைப்படுத்துவதற்காக இறைவன் வருவிக்க வந்தேன்; அருளைப் பெற்றேன் என்று அவரே திருவருட்பாவில் கூறியுள்ளார்.

> *“அகத்தே கறுத்துப், புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும்*
> *சகத்தே திருத்தி, சன்மார்க்க சங்கத்தடை வித்திட அவரும்*
> *இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கென்றேஎனை, இந்த*
> *உலகத்தே இறைவன் வருவிக்க உற்றேன், அருளைப் பெற்றேன்”.*

இப்பாடலின் மூலம் சமய, சமுதாயச் சீர்திருத்தமே வள்ளலாரின் கொள்கை என்பதும் அதற்காகவே இறைவன் அனுப்பினான் என்பதும் தெரியவருகின்றது.

### 2.3.1 திருவருட்பா

அவர்தம் உள்ளத்தில் தோன்றிய அற்புதக் கருத்தூற்றுகளே நமக்கு வரப்பிரசாதமாய்க் கிடைத்திருக்கின்ற 'திருவருட்பா' ஆகும். அவர்தம் உள்ளார்ந்த அனுபவங்களையும் பெற்ற பேறுகளையும் வடித்துத் தந்துள்ள கருவூலம் 'திருவருட்பா'. அவரின் திருவுள்ளத்தை அப்படியே அருமையாகக் காட்டுகின்ற கண்ணாடிதான் திருவருட்பா. அது ஆன்மீக ஒளியையும் பலத்தையும் வாரி வழங்குகின்றது. பிறவிப் பிணியையும் உலகப் பற்றையும் வேரறுக்கும் மாமருந்தாகவும் இருக்கின்றது. உலகப் பாசங்களிலும் மாயைகளிலும் அலைந்து திரிகின்ற கோடானகோடி ஆன்மாக்களின் சார்பாளராக அவர் நின்று உள்ளம் கசிந்துருகி இறைவனிடம் வேண்டுகின்ற இவருடைய நிலையைப் பல திருவருட்பா பாடல்களில் காணலாம்.

பன்னீராயிரம் பாடல்களைப் பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பருக்குப் பின் எண்ணற்ற பாடல்களைப் பாடிக் கவிமழை பொழிந்த பெருமை வள்ளலாரையே சாரும். அதனால் தான், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய படைப்புகளுள் 'திருவருட்பா' ஈடிணையற்றதாகக் கருதப்படுகின்றது. தாமே திருவருட்பாவை எழுதியதாக வள்ளலார் கூறவில்லை. இறைவன் அருளால் தோன்றியதென்பதனை,

> *"நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன் சொல் வார்த்தை*
> *நானுரைக்கும் வார்த்தை யன்று"*

என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றார்.

## 3. வள்ளலார் வழங்கிய அருட்தொடர்கள்

உலக மக்களின் நன்மைக்காக வள்ளலார் உருவாக்கித் தந்துள்ள சொற்றொடர்கள் கருத்தாழமிக்கவை. அவை ஆன்மீகப் பலமும் அருள் வளமும் பொருள் செறிவும் உடையவை. வள்ளலார் அருளிய தொடர்களுள் பின் வருவன அவருடைய கொள்கைகளையும் திருவுளத்தையும் நன்கு விளக்குவனவாக உள்ளன. அவை :–

அ. **சமரச சுத்த சன்மார்க்க நெறி,**

ஆ. **அருட் பெருஞ்சோதி,**

இ. **தனிப் பெருங்கருணை,**

ஈ. **•மரணமிலாப் பெருவாழ்வு** என்பன

மக்கள் இத்தொடர்களைப் புரிந்து உள்ளத்திலே இருத்திக் கொள்ளும்போது அவர்களின் ஆன்மீகப் பயணம் எவ்விதச் சிரமமும் இன்றித் தொடரும். வள்ளலார் பெற்ற அனுபவத்தையும் பேற்றையும் அடைவதற்கும் இது வழி வகுத்திடும் எனலாம்.

### 3.1 சமரச சுத்த சன்மார்க்க நெறி

வள்ளலார் கண்ட பெருநெறியே சமரச சுத்த சன்மார்க்க நெறியாகும். உயிர்களிடத்தில் வேறுபாடு காட்டாது, எல்லா உயிரையும் தம்முயிராகச் சமநோக்கில் கருதுகின்ற உள்ளம் படைத்தவர் வள்ளலார். வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கு இணங்க, தாம் பெற்ற இன்பத்தை இந்த வையகத்தாரும் பெற்றுத் திளைக்க அருளிரக்கத்தால் வழங்கிய பெருநெறியே இந்தச் சமரச சுத்த சன்மார்க்க நெறியாகும். இப்பெரு நெறியை இறைவனே வழங்கினான் என்றும் மக்களிடம் கொண்ட இரக்கத்தினாலேயே இந்நெறியை மக்களிடத்தில் எடுத்துரைத்ததாகவும் அவர் தம் பாடல்களில் சான்றுகளைக் காட்டிச் செல்கிறார்.

*"பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்*
*பவநெறி இதுவரை பரவியது இதனால்*
*சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்*
*செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ*
*புன்னெறி தவிர்த்தொரு புதுநெறி எனும்வான்*
*புத்தமுதருள் கின்ற சுத்தசன் மார்க்கத்*
*தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே,*
*தனி நடராஜாஎன் சற்குரு மணியே"*

*"ஏன் உரைத்தேன் இரக்கத்தால்*
*எடுத்துரைத்தேன் கண்டீர்*
*யான்அடையும் சுகத்தினைநீர்*
*தான் அடைதல் குறித்தே'.*

#### 3.1.1 சொற்பொருள் விளக்கம்

'சத்மார்க்கம்' என்ற வடமொழித் தொடரே சன்மார்க்கம் என்று தமிழுருவாகி நிற்கின்றது. 'சத்' என்பதற்கு உண்மை அல்லது மெய்மை என்பது பொருள். 'மார்க்கம்' என்பதற்கு வழி அல்லது நெறி என்பது பொருள். 'சமரசம்' என்பது நாடு, மொழி, சமயம், சாதி முதலியவற்றிற்குக் கட்டுப்படாது, அவற்றைக் கடந்து எல்லாவற்றையும் ஒன்றாக,

சமமாகக் காணும் சமநோக்கு என்று விளக்கம் தரலாம். ஆக, 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்பதற்கு மக்களை ஒன்றுபடுத்தும் தூய்மையான உண்மை நெறி அல்லது நன்னெறி என்று பொருள் தரலாம்.

### 3.1.2. வள்ளலாரும் சன்மார்க்கமும்

வள்ளலார் இந்நெறியின் மூலமாக மனித குலத்தைப் பகுத்தும், வகுத்தும் வைத்திருக்கும் சாதி, சமய, மொழி, இனத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, மனிதர்களை ஒரு குடும்பமாக மாற்றுவதற்கு முயன்றார். அதற்காகவே இந்நெறிக்காக ஒரு சங்கத்தை கி. பி. 1865–ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். இச்சங்கம் தொடக்கத்தில் 'சமரச வேத சன்மார்க்க சத்திய சங்கம்' என்றும் பின்னர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்றும் பெயர் பெற்றது. இச்சங்கம் எதற்காகத் தோற்றுவிக்கப் பெற்றது? அதன் செந்நெறிகள் யாவை? அச்சங்கத்தைச் சார்ந்தவர் எவற்றைப் பெறுவர்? போன்றவற்றிற்கான விளக்கங்கள் குறிப்புகளாகத் திருவருட்பா பாடல்களிலும் அவருடைய உரைநடைப் பகுதிகளிலும் பலவாறாக இடம்பெற்றுள்ளன.

வள்ளலார் கண்ட இப்பெருநெறியைத் தனியொரு புதிய மதமாகக் கருதுதல் கூடாது. மதங்களற்ற மனித சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஓர் இயக்கமாகவே கருதுதல் வேண்டும். அதனால்தான் 'சன்மார்க்கம்' என்ற தொடரே உண்மை நெறியை விளக்கப் போதுமானதாயிருக்க 'சமரச சுத்த' என்ற அடைமொழியையும் வள்ளலார் இணைத்துக் கொண்டார் என்று ம. பொ. சிவஞானம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.[5] வள்ளலாரின் ஒப்பற்ற கொள்கைகளை எல்லாம் உள்ளடக்கியுள்ள இச்சன்மார்க்க நெறி என்றைக்குமே அனைவருக்கும் ஏற்ற ஒரு சிறந்த நெறி ஆகும்.

### 3.1.3 சன்மார்க்க நெறியின் தேவை

இன்றைய நிலையில் மனித சமுதாயம் பல்வேறு தளைகளால் பிணைக்கப்பட்டுள்ளது; அறிவு பல மாயைகளால் மூடப்பட்டுள்ளது. சாதிமுறைகள், சமயப் பிரிவுகள், மூடப் பழக்கவழக்கங்கள் போன்றவை மனிதனைப் போலியான, செயற்கையான வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்துவிட்டன. இவை மனிதனைத் தன்னல முடையவனாகவும் வன்முறையாளனாகவும் போலிகளை நம்புகின்றவனாகவும் செய்து விட்டன. இவை போன்ற எத்தனையோ செயல்களில் ஈடுபட்டுப் பிறவியைக் கடக்க முடியாமல் பிறவிகளை எடுத்துத் துன்பத்திற்கு ஆளாகின்றான். அதனால் இன்றைய உலகமே போராட்டக் களமாக மாறிவருகின்றது.

இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு வள்ளலார் வழங்கிய அருட்கொடையான பெருநெறி சன்மார்க்கமே அருமருந்தாக அமையத் தக்கதாகும் எனலாம். அன்புணர்ச்சியும் அதனால் ஊற்றெடுக்கும் இரக்கமும் இன்றைய நிலையில் உலக மக்களுக்கு அதிகமாகவே தேவைப்படுகின்றது. இப்பெருநெறியின் மூலமாக அருட்பெருஞ்சோதி ஆண்டவரை அடைவதற்கு உயிரிரக்கத்தை வலியுறுத்தும் ஜீவ காருண்யமே தக்க வழிமுறையாகும் என்று வள்ளலார் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வள்ளலார் இச்சன்மார்க்க நெறியைத் தொண்டுக்குரிய ஒரு நெறியாகவே உருவாக்கியுள்ளார். நல்ல சமயவாதி வெறும் பக்தியினால் மனநிறைவு அடைந்து விட இயலாது. துன்பத்தில் உழல்பவரின் வாட்டத்தைப் போக்க உரிய தொண்டுகளைச் செய்கின்ற பொழுதே மன நிறைவும் திருப்தியும் உண்டாகும். உயிரிரக்கம் தொண்டாக மாற்றப்படும் பொழுது உயிரிரக்கத்தினால் தொண்டு செய்கின்றவரும், அத்தொண்டுக்கு ஆளாகின்றவரும் பயன்பெறுவர் என்பது உறுதி. அதனால்தான் சன்மார்க்கத்தைச் சார்ந்தவர் ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கத் தன்னாலியன்றதைச் செய்ய வேண்டும் என்பதனை வள்ளலார் வலியுறுத்தினார். அது மட்டுமல்லாமல், புரிகின்ற அத்தொண்டும் சாதி, மதம், இனம் ஆகியவற்றைக் கடந்ததாக இருத்தல் வேண்டும் என்பதனையும் அறிவுறுத்தியுள்ளார்.

*"சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்*
*சோதியைக் கண்டேனடி - அக்கச்சி*
*சோதியைக் கண்டேனடி"*

என்று அவர் கூறுவது கருதத்தக்க ஒன்று. திருவருட்பாவில் பல இடங்களில் வள்ளலாரின் உயிர்நெறியான இப்பெருநெறி இரண்டறக் கலந்து இழைந்தோடுவதைக் காணலாம்.

**"என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே"**

**"தயையுடையார் எல்லாருஞ் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே"**

**"அருளுடையார் எல்லாருஞ் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே"**

**"சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் நுமது**
**தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்"**

**"சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்**
**என்மார்க்கம் நின்மார்க்கமே"**

இன்றைய நிலையில் போராட்டம் நிறைந்த வாழ்க்கைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்;

அமைதியற்ற சூழலில் நிம்மதியிழந்து அரைகுறை வாழ்வையே மேற்கொள்கின்றனர். அதனைப் போக்கி மன நிறைவையும் ஆன்மலாபத்தையும் தருவதில் சன்மார்க்க நெறி முக்கியப் பங்காற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வள்ளலார் தந்துள்ள ஒப்புயர்வற்ற அருட்கொடையாகவே இந்நெறியைக் கருத வேண்டும். இந்நெறி மக்கள் கூட்டத்தாரால் பரவலாகப் பின்பற்றப்பட வேண்டும். போரிடும் உலகை வேரொடு சாய்க்க அன்புணர்ச்சியையும் உயிர் இரக்கத்தையும், தொண்டு மனப்பான்மையையும் மூலதனமாகக் கொண்டுள்ள இப்பெருநெறியே ஏற்ற மருந்தாகும். இந்தச் சன்மார்க்க நெறியைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய ஒரு காலப்பகுதிக்குள்தான் நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். அதற்கான காலம் கனிந்துவிட்டது; நேரம் வந்து விட்டது.

## 3.2 அருட்பெருஞ்சோதி

உலக மக்களின் நன்மைக்காக வள்ளலார் வழங்கியுள்ள மற்றொரு அருட்கொடை 'அருட்பெருஞ்சோதி' எனும் கருத்தாழமிக்க சொற்றொடர் ஆகும். இத்தொடர் மகாமந்திர மொழியாகவும், உயிர்மொழியாகவும் கருதப்படுகின்றது. இத்தொடரே சன்மார்க்க தத்துவத்தின் முக்கியச் சாரமாகக் கருதப்படுகின்றது. மனிதப் பிறவி எடுத்துள்ளதன் நோக்கமே எல்லாம் வல்ல இறைவனை இனங்கண்டு அடைதலே ஆகும். சமயங்களும் ஞானிகளும் இறைவனைப் பல்வேறு பெயர்களால் சுட்டுவதோடல்லாமல், அந்த இறைவனை அடையும் வழி வகைகளையும் கூறியுள்ளார். ஆனால், வள்ளலாரோ இறைவனை அருட்பெருஞ்சோதியாக அடையாளங்கண்டு, அந்த அருட்பெருஞ் சோதியை அடையும் வழிமுறையாகச் சன்மார்க்க சங்கத்தைக் காட்டியுள்ளார்.

### 3.2.1 சொற்பொருள் விளக்கம்

அருள், பெரும், சோதி ஆகிய மூன்று சொற்களுக்கும் தனித்தனியான வெளிப்படைப் பொருளும் ஆழ்ந்த பொருளும் உள்ளன. இச்சொற்களுக்கான வெளிப்படைப் பொருள் அனைவரும் அறிந்ததே. ஆழ்ந்து பார்க்கும் போது இச்சொற்களுக்கான பொருள் விரிவடைந்து கொண்டே போகும் தன்மையைக் கொண்டுள்ளன.

'அருள்' என்பது அன்பின் கனிவால், முதிர்ச்சியால் ஏற்படுகின்ற ஒன்று. முதிர்ந்த அன்பில் வெளிப்படும் அருளானது எல்லைகளற்று, வேறுபாடற்று, எல்லாவுயிரையும் தம்முயிர் போல் எண்ணுவதாக அமைந்திருக்கும். அது பகைவனுக்கும் இரக்கங் காட்டி துணை செய்வதாகவும் அமையும். இப்படிப்பட்ட அருளே வேண்டும் என்கிறார் வள்ளலார். உள்ளத்தில் அன்பு கலந்த அருளே வளர்க்கப்பட வேண்டும். உள்ளத்திற்கு அணிகலம் அருளே. மாறாக, உள்ளத்தில் இருள் சேர்ந்திருக்கும் பொழுது பிறவித் துன்பம்

நீங்க வழியே இல்லை. இறைவன் அருளாய் இருக்கிறான். அந்த இறையருளை உணர, அனுபவிக்க நம் உள்ளத்திற்கும் அருள் தேவைப்படுகின்றது. அதனாற்றான், வள்ளலார் இறைவனை அருளாய்க் காட்டுகின்றார். அருளுக்கு விலை அருளே. வேறு எதுவும் கிடையாது.

'பெரும்' என்ற சொல் மிகப் பெரியது, ஒப்பற்றது, அளப்பரியது எனும் பொருள்களை உள்ளடக்கியுள்ளது. இங்குப் 'பெரும்' என்ற சொல் சோதியைச் சிறப்பிக்க, அதன் அளவற்ற தன்மையைக் கூறுவதற்கு அடைமொழியாக வந்துள்ளது.

'சோதி' என்ற சொல் விரிந்த பொருளையே தந்து நிற்கின்றது. சோதி என்பது மனிதனால் ஒளி தருவதற்குப் படைத்துக் கொண்ட விளக்கிலிருந்து மாறுபட்டது; அதே போன்று சூரியன், சந்திரன், தீ ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் சுடரிலிருந்து வேறுபட்டது. விளக்கும் சுடரும் மனிதர் காணக் கூடியவை; அவை புற இருளைப் போக்கக் கூடியவை. ஆனால், சோதியானது எல்லையற்று, காண்பதற்கரியதாய், அஞ்ஞான மென்னும் அகஇருளைப் போக்கி, மெய்ஞ்ஞானமென்னும் ஒளியைப் பரப்பி, ஆசையை அழித்து, ஆனந்தத்தை ஏற்படுத்துவது என்று குறிப்பிடப்படுகின்றது.[6] அதனை உணர்த்தும் வகையிலேயே வள்ளலார்,

*"அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே"*

என்கிறார். இம்மூன்று தனிச்சொற்களும் இணைகின்ற பொழுது ஆழமான பொருளை விளக்கமாய் தந்து நிற்கின்றது. எல்லை காண்பதற்கரியதாய், பிரபஞ்சத்தில் நிறைந்தும் நிலைத்தும் இருப்பதாய், எல்லாவற்றிலும் ஆதார சுருதியாகவும் இயக்கமாகவும் விளங்குவதாய் உள்ள இறைவன் பெரும் ஒளியாய் இருக்கின்றான் என்று பொருள் விளக்கம் தரலாம். அந்தப் பெரும் ஒளியையே வள்ளலார் அருட்பெருஞ் சோதி என்றும் இறையருள் சோதியாக வெளிப்படுகிறதென்றும் கூறுகிறார். இறைவனைச் சோதியாகச் சுட்டுவது மரபு. வேதமும் இதனையே கூறுகின்றது.

உலக மக்களிடையே இறைவனின் உருவ, பெயர் வேறுபாடுகள் ஏராளமான பூசல்களை ஏற்படுத்தியுள்ளதை நாமறிந்ததே. ஆகவே, மக்களிடையே வேறுபாட்டைப் போக்கி ஆன்ம ஒருமைப்பாட்டை வளர்க்க வள்ளலார் இறைவனைப் பொதுத்தன்மைகளினால் அழைப்பதற்காக அனைத்துச் சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இறைவன் அருள் வடிவமானவன், சோதி மயமானவன் என்று கூறி வழி காட்டுகின்றார். இறைவனை ஒளிமயமாகக் காண்பதும் ஒளி வழிபாடும் வேதகாலத்திற்கு முன்பிருந்தே

உலகில் காணப்படுகின்றது. பொதுவாகவே இறைவனை அருள் வடிவமாகக் காணுகின்ற போக்கு எல்லா சமயத்திலேயும் காணப்படுகின்றது. அதனால் வள்ளலார் இறைவனை அருட்பெருஞ் சோதியாய்க் குறிப்பிடுவதில் கருத்து வேறுபாடு தோன்ற வழியில்லை எனலாம்.

வள்ளலார் இறையருளை அருட்பெருஞ் சோதியாய் தரிசித்துள்ளதைத் திருவருட்பா பாடல்களின் பல இடங்களில் காண முடிகின்றது.

*"அமரரு முனிவரு மதிசயித் திடவே*
*அருட்பெருஞ் சோதியை யன்புட னளித்த*
*கமமுறு சிவநெறிக் கேற்றியென் றனையே*
*காத்தென துளத்தினிற் கலந்தமெய்ப் பதியே"*

*"நாடல் செய்கின்றேன் அருட்பெருஞ் சோதி*
*நாதனை என்னுள்ளே கண்டு*
*கூடல் செய்கின்றேன் எண்ணிய வெல்லங்*
*கூடியே........ "*

எனவே, உள்ளத்தில் சோதியை நிலைநிறுத்தும் பொழுதே இறைவனைக் காணலாம் என்கிறார். இதனைத்,

*"தவறாத வேதாந்த சித்தாந்த முதலாச்*
*சாற்றுகின்ற அந்தமெலாந் தனித்துரைக்கும் பொருளை*
*இவறாத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்*
*இருந்தருளாம் பெருஞ்சோதி கொண்டறிதல் கூடும்"*

என்று கூறுகிறார். ஆன்மாவில் ஒளிசேர்க்க வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றியும் சில பாடல்களில் காட்டிச் சென்றுள்ளார்.

அருட்பெருஞ் சோதியை மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் வகையிலேயே திருவிளக்கு வழிபாட்டைச் செய்து வருமாறு தமது அன்பர்களுக்குக் கூறியுள்ளார். இறைவன் ஒளியாக, சோதியாக இருப்பதனை விளக்கு உணர்த்துகின்றது. தாம் அமைத்த 'சத்திய ஞானசபை'யின் வழிபாட்டுப் பொருளாக வள்ளலார் விளக்கொளியை அமைத்திருப்பது சிந்தனைக்குரியது. வள்ளலாரின் இந்த வழிகாட்டுதல் பணி குறைந்தபட்சம் தமிழர்களை ஒன்றுபடுத்த உதவும் எனப் பெரிதும் நம்பலாம். இக்காலச் சூழலுக்கு மிகவும் பயனுள்ள சொற்கோர்வையாக இத்தொடர் அமைந்துள்ளது.

### 3.3 தனிப்பெருங்கருணை

வள்ளலார் வழங்கியுள்ள மற்றொரு கருத்தாழமிக்க சொற்றொடர் 'தனிப்பெருங்கருணை' என்பதாகும். இத்தொடரில் அடிப்படையாக அமையும் சொல் 'கருணை' என்பது. இதற்கு அருள் என்ற பொருளைக் கூறலாம். இறைவன் தனிபெருங் கருணையாக இருக்கிறான் என்பதை வள்ளலார் கண்டு தெளிந்ததால் இறைவனை உணர்த்துகின்ற சொற்றொடராக இது அமைந்துள்ளது.

உலக வாழ்வு சிறக்க அன்பு தேவை. அதுவே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகின்றது. அதனாலேதான் அன்பின் உயர்வைக் காட்ட வள்ளலார் கருணை, காருண்யம் முதலான சொற்களை அடிப்படையாக்கிக் கொள்கின்றார். இந்த அன்பின் கனிந்த நிலையே, முதிர்ச்சிபெற்ற நிலையே அருள் ஆகும். அன்பும் அருளும் எல்லை கடந்தது; வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடுகளைக் கடந்து பொழியப்படுவது ஆகும். இக்கருணையினை எல்லா உயிர்களிடத்திலும் காட்டும்போது அது பெருங்கருணையாக உருவெடுக்கும். ஆக, தனிப்பெருங் கருணை என்பது முழுக்க முழுக்கக் கருணையின் வடிவமாக மாறிவிடுதல் ஆகும். இது மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தக் கூடியதாகும். மனிதன் தெய்வ நிலைக்கு உயருகின்றபொழுது அவனால் தனிப்பெருங் கருணை வடிவமாதல் கூடும். கருணை செய்கின்றபொழுது மனிதன் என்பவன் தெய்வமாகலாம் அல்லது தெய்வ நிலைக்கு உயரலாம் என்கிறார். 'தான்' என்ற நிலைபோய் எல்லா உயிர்களையும் ஒன்றாகக் காணுகின்ற ஒப்பற்ற நிலையே தனிப்பெருங்கருணை நிலையாகும். இந்தக் கருணை பயனான வாழ்க்கை வாழ நமக்குப் பெரிதும் உதவும் எனலாம். தவிர, இறைவனைத் தனிப்பெருங் கருணையாகக் கண்டு உணர்வதே ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கின்றது எனலாம்.

இக்கருணையானது எல்லா உயிர்களிடத்தும் ஏற்பட வேண்டும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற வகையில் வளர்ச்சிபெறுகின்ற பொழுது அது பெருங்கருணையாக உருவெடுக்கின்றது. வள்ளலார் அத்தகைய பெருங்கருணை கொண்ட வாழ்க்கையைத்தான் அடைந்திருந்தார். இதனை,

> *"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்*
> *ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்"*

எனும் வரிகளால் அறிந்துகொள்ளலாம்.

ஓர் உருவம் இல்லாத இறைவனைக் காலம்காலமாக மக்கள் பல்வேறு வடிவங்களில்

கண்டிருக்கின்றனர். ஆனால், வள்ளலார் இறைவனைக் கருணையின் முழுவடிவமாகவே காணுகின்றார். எல்லாச் சமயங்களும் இறைவனின் ஓர் இயல்பாகக் கருணையை ஏற்றுக் கொண்டுள்ளன. இறைசக்தி தனிப்பெருங்கருணையாக வெளிப்படுவதை அனைவராலும் உணர முடிவதில்லை. அதனால்தான் கருணையாய் அமைந்துள்ள இறைவனை முழுமையாய் அறிந்து கொள்ளாமல் தாங்கள் அறிந்த வழியே சரியென்று நிலைநாட்டிக்கொள்ள கருணையற்ற வழிகளில் ஈடுபட்டுச் சமயப் பூசல்களுக்கு வழிவகுக்கின்றனர். சமயத்தின் பெயரால் நடைபெற்றுள்ள வன்முறைகளும் போர்களும் பற்றிய செய்திகள் உலக வரலாற்றில் நிறையவே காணப்படுகின்றன. மக்கள் மனங்களில் அன்பும் அருளும் இருந்திருக்குமானால் இவை இடம்பெற்றிருக்க வாய்ப்பே இருந்திருக்காது. எல்லா உயிர்களும் இறைவனின் தனிப்பெருங்கருணையின் விளைவுகள்; இறைவன் என்ற பெருஞ்சக்தியின் சிறு துளிகள் என்று உணர்வு வந்துவிட்டால் மனிதர்களை வேறுபடுத்தும் தடைகள் தானாகவே விலகிப்போகும். எனவே, எல்லாவற்றையும் வேறுபாடற்ற நிலையில் இணைக்கும் சக்தியாகத் தனிப்பெருங்கருணையை வள்ளலார் காணுகின்றார். அத்தகைய கருணையாளனைக் கருணையால்தான் பெறமுடியும் என்கிறார். அன்பிற்கு விலை அன்பு என்பதுபோல் கருணைக்கு விலை கருணையே என்பதனை உணர்தல் வேண்டும். இதற்கு இருப்பவர், இல்லாதவர் என்ற வேறுபாடு கிடையாது. அனைவராலும் பின்பற்றக்கூடிய வழிமுறையே இது எனலாம்.

கருணையற்றுப் போகும்போது உயிர்களைப் பிரித்துப் பார்க்கத் தோன்றுகிறது. உயிர்களைப் பிரித்துப் பார்ப்பதால் தான் உயிர்க்கொலை செய்யவும், இறைவன் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் கொடுமையும் விளைகின்றது என்கிறார் வள்ளலார். எனவே, கருணைக்குப் புறம்பான செயல்களை மக்கள் மத்தியிலிருந்து படிப்படியாக விடுபடச் செய்வதைத் தமது தலையாய நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார். இதன் உச்சமாக வள்ளுவப் பெருமகனார்[7] வலியுறுத்திய கொல்லாமையையும் புலால் உண்ணாமை யையும் இவரும் வலியுறுத்துகின்றார்.

> *"வன்புடையார் கொலைகண்டு புலை உண்பார்"*
> *"கொடியவரே கொலைபுரிந்து புலை நுகர்வார்"*

தவிர, சமயத்தில் போலிச் சடங்குகளைத் தோற்றுவித்தவர்களே சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கின்ற கொடுமையையும் ஏற்படுத்தினர். கருணையே வடிவான இறைவனைக் கருணையற்ற முறையில் அடைய முயலும் அறியாமையைக் கண்டு உளம் பதைத்திருக்கிறார்.

*"நலிதரு சிறிய தெய்வமென் றையோ*
*நாட்டில் பலபெயர் நாட்டிப்*
*பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்*
*பலிக்கடா முதலிய உயிரைப்*
*பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே*
*புந்திநொந் துளநடுக் குற்றேன்*
*கலியுறு சீறிய தெய்வவெங் கோயில்*
*கண்டகா லத்திலும் பயந்தேன்"*

கருணை சார்ந்த வழிகளால் மட்டுமே கருணையாளனாகிய இறைவனை அடைய முடியும் என்பதனைப் பல பாடல்களின் வழி விளக்கியுள்ளார்.

வள்ளலாரின் கொள்கையின் உயிர்நாடியாக இருப்பதே இந்த ஜீவகாருண்யக் கோட்பாடுதான். எல்லா உயிர்களையும் எள்ளளவும் வேறுபாடு இல்லாமல் காண்கின்ற ஜீவகாருண்யம் என்கின்ற உயிரிரக்கத்தின் மூலமாகத்தான் இறைவனை அடைய முடியும் என்பதனைக் கண்டார் வள்ளலார். அதனையே உலகத்தாருக்கு எடுத்துரைத்தார். உலகில் காணப்படும் கொலைவெறி தீர்க்கப்பட வேண்டுமானால் வள்ளலார் வகுத்தளித்த அருமருந்தாம் மகாமந்திரச் சொல்லான 'தனிப்பெருங்கருணை' என்ற தத்துவத்தை முழுமையாக உணர்தல் வேண்டும்.

### 3.4 மரணமிலாப் பெருவாழ்வு

வள்ளலார் அளித்த அருட்கொடைகளுள் ஒன்று 'மரணமிலாப் பெருவாழ்வு' எனும் கொள்கையாகும். அவருடைய முக்கியக் கொள்கையைத் தாங்கிப் பிடித்துள்ள அருட்தொடர் இதுவே ஆகும். அவருடைய அருட்சாதனைகளின் உயர் சிகரமாக விளங்குவது இந்த இறவாப் பெருநிலையை உணர்த்துகின்ற மரணமிலாப் பெருவாழ்வுதான் எனில் மிகையில்லை.

பொதுவாகவே உருவம் பெற்றதெல்லாம் அழிந்து விடும் என்ற ஒரு கருத்து உள்ளது. மேலும், உடல் அழிவது; ஆன்மா அழிவற்றது என்ற கீதையின் கருத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இந்துக்கள். ஆனால், எல்லாரும் மரணத்தால் அழியுமென்று நம்பிக்கொண்டிருந்த இந்த உடலையும் மரணத்தையும் எதிர்த்து நின்று அழியாமல் தடுத்து மாற்றிவிட முடியும் என்றும் அதில் சன்மார்க்கிகள் வல்லவர்கள் என்றும் மெய்ப்பித்துக் காட்டியவர் வள்ளலார். அறிவியலாரும் சிந்தித்தும் சீர்தூக்கியும் பார்க்க வேண்டிய ஒன்றாக இது இன்று இருக்கின்றது.

இந்த உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. பஞ்ச பூதங்களால் உருவானது போலவே இறுதியில் இவ்வுடல் பஞ்சபூதங்களோடு கலந்துவிடுகின்றது. அதாவது இறப்பிற்குப் பின்னே பஞ்சபூதங்களோடு இவ்வுடல் கலந்துவிடுகின்றது. ஆனால், உயிர் இந்த உடலை விட்டுப் பிரியாத நிலையிலேயே உடலை மாற்றிவிட முடியுமென்று வள்ளலார் கருதிச் செயற்பட்டார்.

வள்ளலாரின் கொள்கைப்படி கடுமையான யோகத்தின் மூலமும் சன்மார்க்க வாழ்வின் வழியாகவும் இவ்வுடலைச் சுத்ததேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்கின்ற பொன்னுருவங்களாக அதாவது ஒளியுடம்பாக மாற்ற முடியும் என்றும் இதற்கு உயிர்க்குயிராக இருக்கின்ற அருட்பெருஞ்சோதி நமது உடலில் மலர வேண்டும் என்கிறார். அதாவது இந்த ஊனுடலை ஒளியுடலாக மாற்றித் தனிப்பெருங் கருணையாகவும் அருட்பெருஞ்சோதியாகவும் இருக்கின்ற இறைவனோடு இரண்டறக் கலப்பதே மரணமிலாப் பெருவாழ்வாகும் என்கிறார். இந்நிலையை அடையவே வள்ளலார் முயன்று வெற்றி கண்டார் என்பதனை அவரது பெருவாழ்வு காட்டுகின்றது. இறையருளாகிய ஒளியே தமது உடலை மாற்றியதை,

*"தன்னையே எனக்குத் தந்துஅருள் ஒளியால்*
*என்னை வேதித்த என்தனி யன்பே"*

என்று கூறுகின்றார். வள்ளலாரின் உடலின் நிழல் தரையில் விழாமலும், உடற்தோற்றம் புகைப்படத்தில் அகப்படாமலும் இருந்ததை நாம் அறிவோம். இதனை அவரே,

*"திரைந்து நெகிழ்ந்த தோலுடம்புஞ்*
*செழும்பொன் னுடம்பாய்த் திகழ்ந்தேனே"*

என்று குறிப்பிட்டுள்ளார். ஒளியுடலைப் பெற்றிருந்த காரணத்தினால்தான் வள்ளலாரால் சித்திவளாகத்தில் தனியறையில் திருக்காப்பிட்டுக் கொண்டு ஒளியோடு ஒளியாகக் கலந்துபோக முடிந்தது; சோதியில் கலந்து மறைந்துபோக முடிந்தது.

உலகமக்களும் இந்த ஒளியுடலைப் பெற்று, மரணமிலாப் பெருவாழ்வில் இணைய வேண்டும் என்பதற்காகவே சன்மார்க்க சங்கத்தைத் தொடங்கி, "சாகாதவனே சன்மார்க்கி" என்றும் "என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே" என்றும் வள்ளலார் வலுயுறுத்துவதைக் காணலாம். ஆக, இந்தப் பிறவியின் நோக்கமே மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவதில்தான் முழுமையடைகின்றது என்கிறார் வள்ளலார். இத்தன்மையை எல்லாராலும் பெறமுடியும் என்றும் அதற்குத் தனிக்கல்வியும்

தனிப்பயிற்சியும் பெற வேண்டுவது அவசியம் என்றும் குறிப்பிடுகின்றார். அந்த மரணமிலாப் பெருவாழ்வுக்கு மக்களை அழைத்துச் செல்லுகின்ற மார்க்கம்தான் சன்மார்க்கம் என்கிறார்.

*"சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்*
*சாகா வரத்தையும் தந்து மேன்மேலும்*
*அன்பையும் விளைவித்து அருட்பேரொளியால்*
*இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்*
*ஓருருவாக்கி யான் உன்னிய படியெலாஞ்*
*சீருறச் செய்து உயிர்த்திறம்பெற அழியா*
*அருளமுதம் அளித்தனை அருள்நிலை ஏற்றினை*
*அருளறிவு அளித்தனை அருட் பெருஞ்சோதி"*

*"சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த சோதியே*
*தன்னோர் முடியொன்று எனது முடியிற் தரித்த சோதியே"*

*"சிற்சபையும் பொற்சபையும் சொந்தம் எனதாச்சு*
*தேவர்களும் மூவர்களும் பேசுவது என்பேச்சு*
*இச்சமைய வாழ்வில் எனக்கென்னை இனிபேச்சு*
*என் பிறப்புத் துன்பமெலாம் இன்றோடே போச்சு"*

## 4. முடிவுரை

மேலே விளக்கப்பட்டுள்ள அருட்தொடர்கள் யாவும் தனித்து இயங்குபவை அல்ல. அவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவற்றின் மூலம் வள்ளலார் உலகம் ஒருமையில் ஓங்க வேண்டும் என்றும், ஏற்றத் தாழ்வற்ற, எல்லாரும் இனிது வாழ்கின்ற சமுதாயத்தைப் படைக்க விரும்பினார் என்றும் தெளிவாக உணரலாம். அவருடைய சன்மார்க்க வழியானது அருளும் பொருளும் இணைந்த வாழ்க்கையை அமைக்க வழிகாட்டுகின்றது எனலாம். இன்றைய உலகம் முழுக்க முழுக்கப் பொருள் வழியே செல்லுகின்றது. இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் தேவைதான். ஆனால், அந்தப் பொருள் அறவழியில் வந்து, அருளை விளைவிப்பதாக இருந்தால் நல்லது. இல்லையேல் துன்பங்களே வந்து சேரும். அந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை வாங்கித் தருவனவே இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள தொடர்கள் என்பதனை உணர்ந்து அதனை அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு முன்வருதல் வேண்டும். அவர் காட்டிய வழியில் சென்று உலக மக்கள் ஈடேற்றம் காண வேண்டும். அவர் உலக

மக்களின் நன்மைக்காக ஏற்படுத்தியுள்ள இத்தொடர்களை மக்களுக்கு எடுத்துரைத்துப் பின்பற்ற வைப்பதில்தான் வள்ளலாரின் அன்பர்களுக்கு வெற்றியே உள்ளது. மறந்தும் மனிதரைப் பாடாத மகான் வள்ளலாரைப் போற்றிப் பரவுவோம்.

*"சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு;*
*சீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு!*
*அம்பலப் பாட்டே அருட்பாட்டு;*
*அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு!*
*நடராசர் பாட்டே நறும் பாட்டு;*
*ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு!"*

## அடிக்குறிப்புகள்

[1] *கல்யாண சுந்தரனார். திரு. வி.,* **இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்.,** பாரி நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு 1994, முன்னுரை

[2] British Paramountancy and Indian Renaissance (Part I - by R. C. Majumdar and K. K. Datta., P.P 836-837 . (மேற்கோள் ஆதாரம் : *குருசாமி, மா. பா.,* **வள்ளலார் – ஓர் அறிமுகம்,** மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை. ) முதற்பதிப்பு 1977, ப. 9

[3] **வித்துவான்** *மறை திருநாவுக்கரசு,* மறைமலையடிகள் வரலாறு, ப. 50 ( மேற்கோள் ஆதாரம் : குருசாமி மா. பா., **வள்ளலார் – ஓர் அறிமுகம்**)

[4] இராசேந்திரன். தி. வெ., **திருவருட் பிரகாச வள்ளல் யார்?,** சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருப்பூர், முதற்பதிப்பு 1986, ப. 49

[5] சிவஞானம். ம. பொ., **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு,** பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு. 1967, ப. 144

[6] *சிவகாமசுந்தரி. சு.,* **வள்ளலார்,** மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், இரண்டாம் பதிப்பு, 1973

[7] தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் – **திருக்குறள்,** புலால் மறுத்தல் 251

## மேற்கோள் நூல்கள்


1. அப்பாய் செட்டியார். கொ. அ., **மரணமிலாப் பெருவாழ்வு** (ஓர் ஆராய்ச்சி) சுரேஷ் பதிப்பகம், சேலம், (முதற் பதிப்பு) 1982
2. அருள்செல்வி. ப., ***சமரச சுத்த சன்மார்க்க நெறி,*** அருள்ஜோதி பதிப்பகம், சென்னை, (முதற் பதிப்பு) 1991
3. இராசமாணிக்கம். எம். சி., **வாழையடி வாழை மரபில் ஒருவர்,** சக்தி பிரிண்டர்ஸ், ஈரோடு (முதற் பதிப்பு) 1986
4. இராசேந்திரன். தி. வெ., **திருவருட் பிரகாச வள்ளல் – யார்?,** சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருப்பூர், (முதற் பதிப்பு) 1986
5. இராமலிங்க சுவாமிகள்., **மனுமுறை கண்ட வாசகம்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், (முதற் பதிப்பு) 1987
6. இளங்கண்ணனார். வீ., **வள்ளலாரும் உயிரினங்களும்,** உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், சென்னை, (முதற் பதிப்பு) 1985
7. ஊரன் அடிகள்., ***இராமலிங்கரும் தமிழும்,*** சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், சமயபுரம், (முதற் பதிப்பு) 1967
8. கல்யாண சுந்தரனார். திரு. வி., ***இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்,*** பாரி நிலையம், சென்னை, (ஆறாம் பதிப்பு) 1994
9. குருசாமி. மா. பா., **வள்ளலார் – ஓர் அறிமுகம்,** மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, (முதற் பதிப்பு) 1977
10. கோவிந்தசாமி. பொன்., **வள்ளலாரும் பிரம்மஞான சங்கமும்,** கலைச்செல்வி அச்சகம், கடலூர், (முதற் பதிப்பு) 1979
11. சிவஞானம். மா. பொ., **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு,** பூங்கொடி பதிப்பகம், சென்னை, (நான்காம் பதிப்பு) 1967
12. சிவகாமசுந்தரி. சு., **வள்ளலார்,** மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், (இரண்டாம் பதிப்பு) 1973
13. **திருஅருட்பாத் திரட்டு,** வானதி பதிப்பகம், சென்னை, (முதற் பதிப்பு) 1988
14. வெள்ளைவாரணனார். க., **திருவருட்பாச் சிந்தனை,** மணிவாசகம் பதிப்பகம், சிதம்பரம், (முதற் பதிப்பு) 1989